**செய்தி வெளியீடு எண் : 542** **நாள் : 15.03.2023**

**திருவாரூர் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் 316 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 74 லட்சத்து 97 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.**

திருவாரூர் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் 316 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 74 லட்சத்து 97 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக்கழக தலைவர் திரு.உ.மதிவாணன் அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன செயல் இயக்குநர் திருமதி.பி.பிரியங்கா.,இ.ஆ.ப., அவர்கள், திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ.,இ.ஆ.ப., அவர்கள், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பூண்டி.கே.கலைவாணன் அவர்கள், மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.க.மாரிமுத்து அவர்கள், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.கோ.பாலசுப்ரமணியன் அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது…

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களுக்கு தேவையான அனைத்து நலத்திட்டங்களும் உடனுக்குடன் அவர்களுக்கு சென்றடைகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசானது மக்கள் நலன் காக்கும் அரசாக செயல்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்றைய தினம் (15.03.2023) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 79 பயனாளிகளுக்கு விதவை மகள் திருமணத்திற்கான நிதியுதவியுடன் கூடிய தலா 8 கிராம் தங்கமும், 5 பயனாளிகளுக்கு ஆதரவற்ற பெண் திருமணத்திற்கான நிதியுதவியுடன் கூடிய தலா 8 கிராம் தங்கமும், 3 பயனாளிகளுக்கு விதவை மறுமண திருமணத்திற்கான நிதியுதவியுடன் கூடிய தலா 8 கிராம் தங்கமும், 13 பயனாளிகளுக்கு கலப்பு திருமணத்திற்கான நிதியுதவியுடன் கூடிய தலா 8 கிராம் தங்கமும், 27 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரமும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் 2 பயனாளிகளுக்கு நிதி ஆதரவு திட்டமும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 18 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், ஊரக வளர்ச்சிதுறை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு கடனுதவிக்கான ஆணையும், தொழில் வணிகத்துறை (மாவட்ட தொழில் மையம்) சார்பில் 2 பயனாளிகளுக்கு தொழில் தொடங்குவதற்கான

மானியத்தொகைக்கான ஆணையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு விதை தொகுப்பு, பழக்கன்றுகளும், தாட்கோ சார்பில் 9 பயனாளிகளுக்கு டிராக்டர்களும், தொழிலாளர் நலத்துறை (சமூக பாதுகாப்புத் திட்டம்) சார்பில 3 பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகைக்கான ஆணையும், 8 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகைக்கான ஆணையும், 4 பயனாளிகளுக்கு இயற்கை மரணம் நிவாரணமும், வேளாண்மைத்துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு தார்ப்பாய்களும், 1 பயனாளிக்கு தெளிப்பான் கருவியும், 2 பயனாளிகளுக்கு பண்ணை கருவிகளும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 2 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணியிடத்திற்கான ஆணையும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு தையல் இயந்திரமும், வருவாய்த்துறையின் சார்பில் 20 பயனாளிகளுக்கு இலவச பட்டாவும், 20 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணையும், பொது சுகாதாரத்தின் சார்பில் 10 பயனாளிகளுக்கு மகப்பேறு உதவித்தொகைக்கான ஆணையும், ஊரக வளர்ச்சிதுறை (மகளிர் திட்டம்) சார்பில் 25 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான கடனும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீட்டிற்கான சாவியும், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு வளர்ச்சியின் சார்பில் 5 பயனாளிக்கு ஊட்டச்சத்து பெட்டகமும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு கருணை அடிப்படையிலான பணிநியமன ஆணையும், விளையாட்டுத்துறை (நேரு யுவகேந்திரா) சார்பில் சிறந்த இளைஞர் மன்ற விருது 1 நபர்க்கு என 316 பயனாளிக்கு ரூ.4 கோடியே 74 லட்சத்து 97 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ப.சிதம்பரம், ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி.சந்திரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பாலசந்தர், வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி.சங்கீதா, செல்வி.கீர்த்தனா மணி, திருவாரூர் நகர்மன்ற தலைவர் திருமதி.புவனபிரியா செந்தில், நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.அகிலா சந்திரசேகர், மாவட்ட ஊராட்சித்துணைத்தலைவர் திரு.கலியபெருமாள், நகர்மன்ற உறுப்பினர் திரு.பிரகாஷ், மன்னார்குடி நகர்மன்ற தலைவர் திரு.சோழராஜன் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in